1974 மார்ச் 26]

திரு. சி. ஆறுமுகம்: சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும்போது சென்னையிலிருந்து காஞ்சிபுரம், திருக்கழுக் குன்றம், மகாபலிபுரம் ஆகிய இடங்களைக் காட்டுகின்றனர். புகழ் வாய்ந்த கோதண்டராமசாமி கோவிலுக்கும், மதுராந்தகத்திற்கும் அழைத்துச் செல்வதில்லை. ஆகவே, சென்னையிலிருந்து போகிறவர்களை வழியில் மதுராந்தகம், கோதண்டராமசாமி கோவிலுக்கு அழைத்துச்செல்லவும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வெளி நாடுகளி லிருந்து வருகிற பிரயாணிகள் கலைச்சிறப்பு, வரலாற்றுச் சிறப் பைக் காணவருகிறார்களே தவிர, பக்தியினுடைய அடிப்படையில் ஸ்தல யாத்திரை செய்ய வருவதில்லை. ஸ்தல யாத்திரைக்கு வரும்பொழுது கோதண்டராமசாமி கோவில் ஸ்தல புராணத்தை விரித்துரைக்கலாம். இப்படி வருகிறவர்கள் 2, 3 மணி நேரம்தான் அங்கே செலவழிக்கிறார்கள். ஆகவே, வரலாற்றுச் சிறப்பு, கலைச் சிறப்பு மிக்க இடங்கள் என்ற வகையில் மதுராந்தகம் கோதண்ட ராமசாமி கோவில் அடங்கவில்லை.

* 594 Q.— THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government and State Tourism Development Corporation to promote Thiruvanmiyur as a Tourist Centre; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என் டென்னிஸ்: மெரினா கடற்கரை இப்பொழுது நெருக் கடியான இடமாக மாறிக்கொண்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகள் அமைதியான இடங்களை விரும்புகிறார்கள். ஆகையால் இதை அபிவிருத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த வகையிலே திருவான்மியூர் அந்தக் கட்டத்தில் வரவில்லை. சென்னை மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடலோரம், சோழமண்டலம், கோவளம், கன்னியாகுமரி, மகாபலிபுரம் கடற்கரை ஆகிய பகுதிகளை விரிவு படுத்தி, அவைகளை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத்தக்க அளவுக்கு ஆக்குவதற்கான முயற்சிகளை சுற்றுலா வாரியம் மேற்கொண்டு

[1974 மார்ச் 26

வருகிறது. அதைத் தவிர மத்திய அரசின் சார்பாக ஐக்கிய நாட்டு அவையின் சார்பாக அமைக்கப்பட்ட ஒரு குழுவும் வந்து சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையில் இருக்கிற கடற்கரை பகுதிகளை எந்த வகையில் விரிவுபடுத்தி வளப்படுத்தலாம் என்ப தற்கான ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக வந்து பார்த்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்தக் குழுவினுடைய அறிக்கையை இந்திய அரசின் மூலம் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு மத்திய அரசிடமிருந்து ஓரளவுக்கு நிதி பெற்று, மாநில அரசு ஒரு திட்டம் போட்டு அந்தத் திட்டத் தின் அடிப்படையில் இந்தப் பகுதிகளை விரிவுபடுத்தவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த வகையில் திருவான்மியூர் கவர்ச்சிகரமான ஒரு இடமாக ஆக்குகின்ற அத்தகைய செயலில் அடங்காது.

திரு. ஆ. பசந்தாமன் : தலைவரவர்களே, அமெரிக்கா நாட்டுக்குச் சென்று வருகிறவர்கள் 'டிஸ்னி லான்டை'ப்பற்றி பெருமையாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அமைப்பை தமிழ்நாட்டில் கடற்கரையோரப் பகுதியில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் சுற்றுலாத் துறையின் மூலமாக உருவாக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட அமைப்பு ஒன்றை உருவாக்கலாம். அதற்கு ஏராளமான செலவு ஆகும். மத்திய அரசும் மற்றவர்களும் நிதி உதவி செய்தால் அமைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அமைப்பை உருவாக்க முடியாவிட்டாலும் இப்போது 'பிளானடேரியம்' ஒன்றை அமைக்க தனியார் நிறுவனங் களும் சுற்றுலா வாரியமும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகி றார்கள். பிளானடேரியத்தைச் சென்னை மெரினா கடற்கரையில் ஐ.ஜி. ஆபீசுக்கு எதிரில் அமைக்க முயற்சி செய்யப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are two varieties of Tourist Centres. There are beauty centres in which there are waterfalls, natural season, etc., and the other is historical and archaeological centres. Now I find more attention and money are paid to beauty centres and not on the historical and archaeological centres. The historical centres have more permanent value than the beauty centres. May I know from the Hon. Minister for Education and Tourism whether the Government will give more attention to historical and archaeological centres?

1974 மார்ச் 26]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வரலாற்றுச் சிறப்பும்—தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறத்தக்க அளவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும், கண்கவர் காட்சிகள் நிறைந்த இடங்களையும், அழகு வாய்ந்த இடங்களையும் பார்ப்பதில் வெளிநாட்டவர்கள் நாட்டமுடையவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அவர்களைக் கவரத்தக்க—ஈர்க்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள்.

புதைபொருள் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்க்க, வரலாற்றுத் துறையிலும் கல்வித் துறையிலும் ஆர்வமுள்ள ஒரு சிலர்தான் விரும்புவார்கள். ஆகவே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், அழகு மிக்க இடங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளுக்கு வெளிநாட்டவரை ஈர்க்கின்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சுற்றுலாத் துறை அம்மாதிரியான இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

*595 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரத்தில் சுற்றுலா விடுதி ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

இராமேஸ்வரத்தில் ரூ. 6 லட்சம் செலவில் சுற்றுலா மாளிகை ஒன்று கட்டுவதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. சுற்றுலா மாளிகை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் திறந்து வைக்கப்படும். நிலம் அணுகு சாலை முதலியவற்றிற்கு மாநில அரசு வகை செய்துள்ளது. அணுகு சாலைக்காக ரூ. 1.72 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா விடுதியில் தற்போது எத்தனை அறைகள் கட்டப்பட்டுள்ளன ; என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா மாளிகை இரண்டு மாடி கட்டடத்தில் அமைந்திருக்கிறது. அடித்தளத்தில் குளியலறை 2, ஒருவர் தங்கும்